# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2012

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 11

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழின் இனிமைகருதி அதற்கு வைக்கப்பட்ட பெயர்

அ) தேன்தமிழ் ஆ) பைந்தமிழ் இ) செந்தமிழ் ஈ) பழந்தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. 'எம் தமிழர் மூதாதை' எனப் பாவேந்தரால் பெருமையுடன் அழைக்கப்பட்டவர்

அ) சங்கிலியன் ஆ) எல்லாளன் இ) இராவணன் ஈ) சேரன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. நாவலந்தீவு என அழைக்கப்பட்ட நாடு

அ) இலங்கை ஆ) இந்தியா இ) மலேசியா ஈ) சிங்கப்பூர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. கட்டுவித்தான் என்பது

அ) தன்வினை ஆ) பிறவினை இ) குறைவினை ஈ) துணைவினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. காவிரிப்பூம் பட்டினத்தில் ஏற்றுமதி வணிகம் செய்தவன்

அ) செங்குட்டுவன் ஆ) அதியர் மான்

இ) மாநாய்க்கன் ஈ) சோழன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. ஒண்டமிழ் என்பதன் சொற்பொருள்

அ) தீந்தமிழ் ஆ) செந்தமிழ் இ) ஒப்பற்ற தமிழ் ஈ) பைந்தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. செயப்படுபொருள் குன்றிய வினையடி

அ) சிரி ஆ) படி இ) பாடு ஈ) எடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. உள்ளும் புறமும் தூய்மையாக இருப்பவனே சான்றோன். இதில் உள்ளும் புறமும் என்பது

அ) இணைமொழி ஆ) அடுக்குமொழி
இ) அடுக்கிடுக்குத் தொடர் ஈ) உவமைத்தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. இராவணனின் தம்பியின் பெயர்

அ) வீடணன் ஆ) இரணியன் இ) இராமன் ஈ) கம்பன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. ஐந்து நரம்புகளுடைய வீணையின் இசை

அ) தாரம் ஆ) பண் இ) திறம் ஈ) உளரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. 'நனி விரும்பிக் கொண்டாரை' என்பதில் நனி விரும்பி என்பது

அ) பெயர்ச் சொற்றொடர் ஆ) உரிச் சொற்றொடர்
இ) வினைச் சொற்றொடர் ஈ) இடைச் சொற்றொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. மேன்மைக்குரியவரை விளித்து எழுதும்போது பயன்படுத்தும் சொல்

அ) அன்புள்ள ஆ) மாண்புமிகு இ) மேதகு ஈ) பெருந்தகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. மங்குல் என்பதன் பொருள்

அ) இரவு ஆ) பகல் இ) வானம் ஈ) கார் முகில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. வாய்மொழி இலக்கியங்கள் என அழைக்கப்படுவது

அ) நாட்டார் பாடல்கள் ஆ) இறைநெறிப் பாடல்கள்

இ) தத்துவப் பாடல்கள் ஈ) புரட்சிப் பாடல்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. வாய்காட்டுதல் என்ற மரபுச்சொற்றொடர் குறித்துநிற்கும் குறிப்புப் பொருள்

அ) வாயைக் காட்டுதல் ஆ) அளவின்றிப் பேசுதல்

இ) அடக்கமின்றிப் பேசுதல் ஈ) குறைவாகப் பேசுதல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. பாவலர் சாலை இளந்திரையனின் கவிதையில் எதைச் சிறந்த கல்லாகப் போற்றப்படுவது?

அ) செங்கல் ஆ) நடுகல்
இ) மாணிக்கக்கல் ஈ) சிறபக்கல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. பால் நிலா என்பது

அ) வினைத் தொகை ஆ) உவமைத் தொகை
இ) உம்மைத் தொகை ஈ) பண்புத் தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. எல்லாளனுக்கு முன்னர் இலங்கையை ஆண்ட தமிழ் மன்னர்களில் ஒருவன்

அ) சேனன் ஆ) காசியப்பன் இ) சங்கிலியன் ஈ) பாண்டியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. "பாடிய தமிழை மட்டும் பாதியில் விட்டிடாதே" எனக் கூறிய கவிஞன்

அ) இளந்திரையன் ஆ) அம்பி
இ) இரவி ஈ) உதையைவீரயன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. யாழ் நூலகத்தினை வடிவமைத்தவர்

அ) ஆர் இரங்கநாதன் ஆ) கே. நரசிம்மன்
இ) மு.செல்லப்பா ஈ) தம்பையா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. பூம்புகாரில் காதலரைக் களிப்பூட்டும் இளவேனில் விழாவானது

அ) கலை விழா ஆ) இந்திரவிழா
இ) பொன் விழா ஈ) முத்தமிழ்விழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. சோழநாட்டில் பிறந்து பாண்டிய நாட்டில் கணவனை இழந்து சேரநாட்டில் தெய்வமானவள்

அ) மாதவி ஆ) சீதை இ) சாவித்திரி ஈ) கண்ணகி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. ஆயர் குலம் என்பது பெண்கள் எதில் உயர்ந்தவர்கள்

அ) இடையர் குலம் ஆ) பாணர்குலம் இ) ஆடற்குலம் ஈ) இசைக்குலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. தொகைகள் எத்தனை வகைப்படும்.

அ) ஏழு ஆ) மூன்று இ) ஆறு ஈ) ஐந்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. பூவனம் என்பது

அ) மாஞ்சோலை ஆ) பூஞ்சோலை இ) பனஞ் சோலை ஈ) தென்னஞ் சோலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. இனிய கவிதை படித்தேன். இதில் வந்துள்ள இனிய என்பது

அ) அடைமொழி ஆ) எழுவாய் இ) பயனிலை ஈ) செயப்படுபொருள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. கடற்கோளினால் மூழ்கடிக்கப்பட்ட பெருநிலப் பகுதி

அ) குமரிக் கண்டம் ஆ) ஐரோப்பாக் கண்டம்

இ) ஆபிரிக்கக் கண்டம் ஈ) ஆசியக் கண்டம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. பாங்கியர் என்ற சொல் குறித்து நிற்பது

அ) தோழியர் ஆ) பெரியவர் இ) ஆண்கள் ஈ) ஆடவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. பின்வருவனவற்றுள் புல் இனத்தைச் சேர்ந்தது

அ) மா மரம் ஆ) பனை மரம் இ) பலா மரம் ஈ) கொய்யா மரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. பொன் + தாலி என்பதைப் புணர்த்தினால் வருவது

அ) பொற்றாலி ஆ) பொன்தாலி

இ) பொன்ந்தாலி ஈ) பொண்தாலி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. யாழ் நூலகம் எப்போது யாரால் எரிக்கப்பட்டது?

2. பேராற்றலும் தோற்கும் என்ற கருத்தை விளக்கும் பழமொழி யாது?

3. கண்ணகி உரைத்த வஞ்சினம் யாது?

4. 'நெஞ்சையள்ளும் மணியாரம்' எனச் சிலப்பதிகாரம் புகழப்படுவது ஏன்?

5. இராவணனது சிறப்பியல்புகள் இரண்டு தருக.

(புள்ளிகள் 10)

6. பாடநூலில் உமக்குப் பிடித்த புதுக்கவிதை எது? ஏன்?

7. இலங்கையில் பண்டைய தமிழ்ச் சிற்றரசுகள் இருந்த இடங்கள் இரண்டு தருக.

## 3) பாடலை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

*விதை முளைக்க மரம் வளரும்*
*விதை மறைந்து போகுமே*
*விதை மறைந்து போவதால் தான்*
*மரம் வளரலாகுமே.*

*மழைத் துளிகள் ஒன்றுசேர*
*மாநதியும் தோன்றுமே*
*மழைத்துளிகள் மறைந்து போகும்*
*மாநதியாய்த் தெரியுமே.*

*மெழுகுவர்த்தி எரிவதால் தான்*
*விளக்கின் ஒளி தோன்றுமே*
*மெழுகுவர்த்தி மறையும்போது*
*வெளிச்சமாக மாறுமே.*

*ஈகம் செய்யும் பண்பினால் தான்*
*நாளும் அன்பு பெருகுமே*
*ஈகம் என்றால் நமை மறந்து*
*பிறர்க்குதவி செய்வதே.*

1. மாநதி எதனால் தோன்றுகின்றது?

2. ஈகம் என்றால் என்ன?

3. வெளிச்சம் எதனால் தோன்றுகின்றது?

4. அன்பு எதனால் பெருகுவதாகக் கூறப்படுகின்றது?

5. இப்பாடலிலிருந்து நீர் கருதுவது யாது?

(புள்ளிகள் 10)

## 4) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

உலகே! என் குழந்தையைக் கைப்பிடித்துக் கொள். அவன் இன்று பள்ளி செல்லத் தொடங்குகிறான். எல்லாமே சில காலத்திற்கு அவனுக்கு அந்நியமாகவும் புதிதாகவும் இருக்கும். அவனைக் கனிவுடன் நடத்துவாய் என்று நான் நினைக்கின்றேன். உனக்குத் தெரியுமா, அவனது கூண்டில் இதுவரை அவன்தான் அரசன். அவன்தான் கொல்லைப் புறத்தின் தலைவனாக இருந்திருக்கிறான். நான் எப்போதுமே அவனது காயங்களுக்கு மருந்திட அவனைச் சுற்றியே இருந்திருக்கிறேன் நான் அவனைத் தேற்றி ஆறுதல் அளிக்க கூடவே இருந்திருக்கிறேன்.

இந்த உலகில் வாழ்வதற்கு நம்பிக்கையும், அன்பும், தைரியமும் தேவை. ஆகவே உலகே! அவனது பிஞ்சுக் கைகளைப் பற்றிக் கொண்டு அவன் அறியவேண்டிய விடயங்களை நீ அவனுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அவனுக்குக் கற்றுக்கொடு. உன்னால் முடிந்தவரை மிருதுவாகக் கற்றுக் கொடு.

அவனுக்கு நூல்களின் அற்புதத்தைக் கற்றுக்கொடு. வானத்திலுள்ள பறவைகள், தேனீக்கள், பசுமையான மலையிலுள்ள பூக்கள் போன்றவற்றின் விந்தை நிலையைப் பற்றிச் சிந்திப்பதற்கு அவனுக்கு அமைதியான நேரத்தைக் கொடு. ஏமாற்றுவதை விட; தோல்வியடைவது மிகமிக மதிப்பானது என்பதை அவனுக்குக் கற்றுக்கொடு. மற்றவர்கள் அவனது சொந்தக் கருத்துக்களைத் தவறு என்று சொன்னாலும் அவற்றில் அவன் நம்பிக்கை வைத்திருக்கும்படி அவனுக்குச் சொல்லிக்கொடு.

1. இந்த உலகில் வாழ்வதற்குத் தேவையானவை எவை?

2. எவற்றின் விந்தை நிலமைபற்றிச் சிந்திப்பதற்குத் தன் மகனுக்கு அமைதியான நேரத்தைக் கொடு எனக் கேட்கின்றார் ?

3. எது மதிப்பான செயல் என்று இங்கு கூறப்படுகின்றது?

4. மற்றவர்கள் அவனது கருத்தைத் தவறு என்று சொல்லும் போது அவன் செய்ய வேண்டியது என்ன?

5. குழந்தைகளுக்கு எவ்வாறு கற்றுக் கொடுக்க வேண்டும்?

(புள்ளிகள் 10)

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. 1. பின்வரும் செய்வினைச் சொல்லியங்களைச் செயற்பாட்டுச் சொல்லியங்களாக மாற்றுக.

அ. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை எழுதினார் .

______________________________

ஆ. இராசஇராசசோழன் தஞ்சைப்பெருங்கோவிலைக் கட்டினான்.

______________________________

2). ஆகுபெயர்கள் எத்தனை வகை? சினை, குணம், தொழில், இடம் ஆகிய ஆகுபெயர்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

______________________________

______________________________

______________________________

3. வினைத்தொகை, உம்மைத்தொகை, உவமைத்தொகை இவை ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுகள் தருக.

______________________________

______________________________

______________________________

4. தரப்பட்டுள்ள மரபுத்தொடர் களின் பொருள்விளங்கச் சொல்லியங்கள் எழுதுக.

1. பச்சைப் பசேல் ______________________________

______________________________

2. ஓடியோடி ______________________________

______________________________

3. உள்ளும் புறமும் ______________________________

______________________________

5. ஆறாம், ஏழாம் வேற்றுமை உருபுகள் எவை? 7ம் வேற்றுமை உருபு இடம்பெறுமாறு சொல்லியம் ஒன்று எழுதுக.

(புள்ளிகள் 15)

## 6) பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

எம் உறவுகள் உலகம் முழுவதும் புலம்பெயர்ந்து வாழ்ந்த போதும் பலர் என்றும் தாயக உணர்வுடன் வாழ்கின்றனர். மொழிப்பற்றும் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர் . முட்கம்பி வேலிக்குள் எம் மக்கள் வாழ்கின்ற கொடுமை கண்டும் நம்மிற் சிலர் பாராமுகமாக இருக்கின்றனர் . ஆனால் இளைய குமுகாயம் கொதித்தெழுந்து நீதிகேட்டுப் போராட அணியமாய் நிற்கின்றது. இவர்கள் ஒன்று திரண்டு பயணித்து நிற்பதைப் பார்க்கும் போது தாயகத்தின் மீதான நம்பிக்கை மேலும் வலுக்கின்றது. பல்லினக் கலாசாரச் சூழலில் முற்று முழுதாக ஆழ்ந்து போகாமல் இந்த இளைய குமுகாயம் தமது பண்பாட்டைப் போற்றி, பலமிக்க கல்வியறிவையும் பெற்று ஒற்றுமையாகத் தொடர்ந்து செல்ல வேண்டும். நீ பெரிது நான் பெரிது என்று வாழாமல் நாடு பெரிதென்று வாழப் பழகிக் கொள்ள வேண்டும். நாம் முகவரியற்றவர்களாக வாழாமல் தமிழன் என்ற முகவரியோடு வாழ எம் தாய்மொழி தமிழையும் எமது பண்பாட்டுக் கலைகளையும் என்றும் கற்றுச் சிறப்படைவோம்.

**சுருக்கத்திற்கான குறிப்புகள் :**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

(புள்ளிகள் 05)

7) **கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- வன்னிப்போரும் மாந்தநேயமும்
- யாழ் நூலகம்
- வாசிப்பதால் மனிதன் முழுமையடைகிறான்.

(புள்ளிகள் 20)